**கவனிக்க -** (i) 2026.04.30 ஆந் திகதிய 2487 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானியின் பகுதி I, III பிரசுரிக்கப்படவில்லை.
(ii) இம்முறை பிரசுரிக்கின்ற வர்த்தமானியின் பகுதி VI இல் 2026 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்ட நீதாசன வலயத்திற்கான யூரிமார் பெயர்ப் பட்டியலொன்று மும் மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2488 - 2026 මැයි මස 08 වැනි සිකුරාදා - 2026.05.08**
2488 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க -** சேர்பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2026.04.24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, மே மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## யட்டிநுவர பிரதேச சபை

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

யட்டிநுவர பிரதேச சபையின் ஆளுகைப் பிரிவுக்குள் யட்டிநுவர பிரதேச சபையில் அமைந்துள்ள வீதிகள்/பாதைகள் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கைகளைப் பேணி வருவதற்கென 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளதனால், அதற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2460 இலக்கம் கொண்ட 2025.10.24 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலின் கீழ் அட்டவணையில் விபரிக்கப்படும் பாதைகள் / வீதிகள் யட்டிநுவர பிரதேச சபைக்குரிய பாதைகள்/ வீதிகள் என இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

நளின் எரந்த பிட்டியேகும்புர,
தவிசாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,
எம்பில்மீகம,
பிலிமதலாவ.
2026 ஏப்பிறல் 22.

**அட்டவணை**

| தொ. இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடதுபுறம் | வலதுபுறம் | நீளம் | அகலம் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஹெட்டி வத்த சங்க மண்டபம் அருகில் உள்ள பாதை | தியபலா கொட | ஹெட்டி வத்த மண்டபம் அருகில் | திரு. எச். ஜி. கே. ரத்நாயக்க என்பவரது வீடு அருகில் | 1. திரு. யூ. ஜீ. சீ. எல். குமார<br>2. திருமதி டப்ளிவ். ஜீ. இந்திராவது<br>3. திரு. எச். ஜீ. ரஞ்சித் பிரேமசிங்ஹ<br>4. திரு. ஏ. ஏ. சமன் குமார<br>5. திரு. ஆர். எப். விமலரத்ன<br>6. திரு. எச். ஜீ. எஸ். பத்மசிரி | 1. ஹெட்டிவத்த எக்ஸத் நலன்புரி சங்கம்<br>2. திரு. எச். ஜீ. சமரசிங்ஹ<br>3. திருமதி டப்ளிவ். ஜீ. இந்திராவதி<br>4. திரு. யூ. ஜீ. டிக்கிரிபண்டா<br>5. திருமதி எச். ஜீ. சொபியா<br>6. திரு. ஆர். எப். விமலரத்ன<br>7. திரு. எச். ஜீ. எஸ். பத்மசிரி | 120 மீற்றர் | 2.4 மீற்றர் | 6043 |

05-02/1

**யட்டிநுவர பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

யட்டிநுவர பிரதேச சபையின் ஆளுகைப் பிரிவுக்குள் யட்டிநுவர பிரதேச சபையில் அமைந்துள்ள வீதிகள்/பாதைகள் தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் நடவடிக்கைகளைப் பேணி வருவதற்கென 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 02 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளதனால், அதற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2459 இலக்கம் கொண்ட 2025.10.17 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலின் கீழ் அட்டவணையில் விபரிக்கப்படும் பாதைகள் / வீதிகள் யட்டிநுவர பிரதேச சபைக்குரிய பாதைகள்/ வீதிகள் என இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

நளின் எரந்த பிட்டியேகும்புர,
தவிசாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,
எம்பில்மீகம,
பிலிமதலாவ.
2026 ஏப்பிறல் 22.

**அட்டவணை**

| *தொ. இல.* | *பாதையின் பெயர்* | *கிராம அலுவலர் பிரிவு* | *ஆரம்பம்* | *முடிவு* | *இடதுபுறம்* | *வலதுபுறம்* | *நீளம்* | *அகலம்* | *நில வரைபட உறுதி இல.* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | கட்டுகண்ணாவ பொத்தபிட்டிய வீதியில் 7 ஆம் கட்டை அருகில் செல்லும் பாதை | மாதலிகம | கடுகண்ணாவ பொத்தபிட்டிய வீதியில் 7 ஆம் கட்டை அருகில் | நெல்வயல் முடியும் இடம் | 1. எம். ஆர். ரத்ன மெனிகே<br>2. எம். ஆர். பிரேமாவதி மெனிகே<br>3. எம். ஆர். ஸ்வர்ணதிலகா | 1. ஜீ. டப்ளிவ். ஜீ. ரீ. சேனாரத்ன | 175 அடி | 10 அடி | 10788 |

05-02/2

# நானாவித அறிவித்தல்கள்

## கல்பிட்டி பிரதேச சபை

### பிரதேச சபை எல்லைக்குள் முச்சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் அறவிடுதல்

உள்ளூராட்சி (தரநிலை துணை விதிகள்) சட்டம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரிவு 3 இன் உட்பிரிவு (1) இன் படி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி, 261 ஆவது அதிகார அமைப்பான கல்பிட்டிய பிரதேச சபையால் 10.03.2026 அன்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானம் இல. 07/2026/03/07/19 இன் கீழ் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஏ. எஸ். எம். ரிக்காஸ்,
தலைவர்,
கல்பிட்டி பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கல்பிட்டி,
2026 மாச்சு 23.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை விதிகள்) சட்டத்தின் பிரிவு 2 இன் துணைப் பிரிவு (அ) உடன் வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி (நிலையான துணைச் சட்டங்கள்) சட்டத்தின் பிரிவு 2 இன் துணைப் பிரிவு (1) இன் கீழ் வடமேல்கு மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், வடமேல்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு, 16.07.2010 அன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி எண் 1663, பகுதி IV (அ) இல் வெளியிடப்பட்ட, பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தி வைப்பது தொடர்பான நிலையான துணைச் சட்டங்கள், கல்பிட்டி பிரதேச சபை எல்லைக்கு பொருந்தும் வகையில் அமுல்படுத்துவதற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இல. 1843, 27.12.2013 அன்று வெளியிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேற்கூறிய துணை விதிகளின் 17 ஆம் பிரிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, பொதுச் சபை முடிவு எண் 07/2026/03/07/19 இன் கீழ், 10.03.2026 அன்று கல்பிட்டி பிரதேச சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, கல்பிட்டி பிரதேச சபையானது தனது அதிகார வரம்பிற்குள் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் நிறுவப்பட்ட முச்சக்கர வண்டி நிறுத்த நிலையங்கள் மற்றும் அவற்றில் பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்காக அறவிடப்படும் கட்டணங்கள் கீழே காணப்படும் அட்டவணை இலக்கம் 01 இன் படி இருக்க வேண்டும் என முன்மொழிகிறது.

**அட்டவணை 01**

முச்சக்கர வாகன சங்கப் பதிவு

| | | |
|---|---|---|
| 1. | சங்கப் பதிவு (ஒரு முறை மட்டும் அறவிடப்படும் கட்டணமாக) | ரூ. 5000.00 |

வாகனங்களுக்கான கட்டணம்

| | | |
|---|---|---|
| 1. | ஒரு முச்சக்கர வாகனத்திற்கான வருடாந்திர பதிவுக் கட்டணம் | ரூ. 500.00 |

05-22

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**

பிரச்சார விளம்பரங்களுக்கு கட்டணம் அறவிடல் - 2026

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 2026 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 16 ஆந் திகதி நடத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மான இல. 05:01:05 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டதென்பது பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அரோஷ அத்தபத்து,
நகர முதல்வர்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026 ஏப்பிறல் 24.

**தீர்மானம்**

ஒர் ஆண்டிற்குரிய பிரச்சார விளம்பரங்களுக்குரிய கட்டணங்கள் குறித்த ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட்டிராத பட்சத்தில், உரிய கட்டணத்திற்கு மேலதிகமாக, தாமதமாகும் மாதமொன்றுக்கு 10% வீதம் என்ற அடிப்படையில் ஒரு பணத்தொகையை விதிப்பதற்கும் பிரேரிக்கப்படுகிறது.

05-30/1

---

**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை**

புதிய கொலன்னாவ வீதி சுயதொழில் விற்பனையக வளவை வழங்குதல்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 2026 ஆம் ஆண்டுக்காக சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பிற நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பூமியை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாக 2025.12.29 ஆம் திகதிய பொதுச் சபைத் தீர்மான இல. 5:04:1 (ஐ) 2025/11/ஜ/57 இன் கீழ் எடுக்கப்பட்ட 2025.12.30 ஆம் திகதிய, 2469/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்திற்கு மேலதிகமாக, 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மான இல. 5:1:6 இன்கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டதென்பது பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அரோஷ அத்தபத்து,
நகர முதல்வர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026 ஏப்பிறல் 24.

**தீர்மானம்**

1. சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரினால் சிபார்சுசெய்யப்படும் சுயதொழில்களில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு

நாளொன்றுக்கு ரூ. 300.00 + அரசாங்கத்தின் அனுமதிக்கப்பட்ட வரிகளுடன்கூடிய ஒரு பணத்தொகைக்கு தற்காலிகமாக இடங்களை வழங்குதல்.

2. வேறு உற்பத்திகளை சந்தைப்படுத்துவோருக்கு நாளொன்றுக்கு ரூ. 1000.00 + அரசாங்கத்தின் அனுமதிக்கப்பட்ட வரிகளுடன்கூடிய ஒரு பணத்தொகைக்கு தற்காலிகமாக இடங்களை வழங்குதல்.

3. தெரு உணவுவகைகளை சந்தைப்படுத்தும் வாகனங்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 300.00 + அரசாங்கத்தின் அனுமதிக்கப்பட்ட வரிகளுடன்கூடிய ஒரு பணத்தொகைக்கு தற்காலிகமாக இடங்களை வழங்குதல்.

4. 2025.12.30 ஆந் திகதிய 2469/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் பக்க இல. 20A இல் பிரசுரிக்கப்பட்ட ‘‘ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்காக சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்சிச்சித்திட்டங்களுக்கும் பிற நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பூமியை ஒதுக்குதல்” என்பதன் கீழ் காட்டப்பட்டுள்ள.

* “ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு முன்னால் இன்டர்லொக் கற்கள் பதிக்கப்பட்டுள்ள பகுதி முழுவதற்கும் (160*110 சாதுர அடிகள்) நாளொன்றுக்கு அறவிடப்படும் கட்டணம், ரூ. 100,000.00 + அரசாங்கத்தின் அனுமதிக்கப்பட்ட வரிகள் என்று சரிசெய்யப்பட வேண்டுமென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

05-30/2

---

**வரக்காபோல பிரதேச சபை**

கட்டணத் திருத்தம் - 2026

வரக்காபோல பிரதேச சபையில் 2026 ஆம் ஆண்டிற்கான இயற்கை உரங்கள் விற்பனைக்கு விதிக்கப்பட்ட கட்டணங்களின் திருத்தம்

26.12.2025 தேதியிட்ட வர்த்தமானி இல. 2469 இன் கீழ் 2026 ஆம் ஆண்டிற்கான இயற்கை உரங்கள் விற்பனைக்கு கட்டணம் விதித்தல் 2026.04.07 அன்று நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில், தீர்மானம் இல. 2026/04/07/E/02(I) இன் கீழ் பின்வரும் தீர்மானம் சபையால் நிறைவேற்றப்பட்டது என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன்.

இ. ஏ. சந்தன எதிரிசிங்க,
தலைவர்,
வரக்காபோல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வரக்காபோல,
2026 ஏப்பிறல் 24.

**தீர்மானம்**

கட்டகோதேவத்த திடக்கழிவு மேலாண்மை மையத்தில் பெருமளவிலான உரம் குவிவதைத் தடுக்கும் பொருட்டு, 2026 ஆம் ஆண்டிற்கான பல்வேறு கட்டணங்களை விதித்து, 2025.10.02 அன்று நடைபெற்ற பொதுச் சபையால், 2025/10/02/8/01 (XIX) தீர்மானம் மூலம் கடகோதேவத்த திடக்கழிவு மேலாண்மை மையத்தால் உற்பத்தி செய்யப்படும் அங்கக உர விற்பனைக்கான விலைகள் 2025/10/02/8/01(XIX) தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால், 2026 ஆம் ஆண்டிற்கான அங்கக உர வெளியீட்டில் பின்வருமாறு திருத்தம் செய்ய முன்மொழியப்படுகிறது.

2026 ஆம் ஆண்டிற்கான இயற்கை உரங்கள் விற்பனை மீதான வரித் திருத்தம்

| *பிரிவு எண்.* | *உரத்தின் அளவு ஒரு கிலோவிற்கான விலை* | *ரூ. ச.* |
|---|---|---|
| 01. | 1 கிலோ முதல் 250 கிலோ வரை | 20.00 |
| 02. | 250 கிலோ முதல் 1000 கிலோ வரை | 15.00 |
| 03. | 1001 கிலோவிற்கு மேல் | 08.00 |

05-32

---

திருத்த அறிவித்தல்

**இமதுவ பிரதேச சபை**

இமதுவ பிரதேச சபையினால் 2026.11.07 ஆம் திகதிய 2462 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் உட்டவணைகள் இதற்கமைய திருத்தப்படுகின்றன என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

இணைப்பு 02 : சபைக்குச் சொந்தமான பொது விளையாட்டு மைதானங்களுக்கான கட்டணங்களை அறவிடுதல் - 2026

| | | |
|---|---|---|
| உப அட்டவணை இல. 02v | போகஹகொட முன்மொழியப்பட்ட சந்தை நிலம் (ஒரு நாளைக்கு) | ரூ. 15,000.00 |

முன்னேற்பாட்டுக் கட்டணங்கள், சேவைக்கட்டணங்கள், மேலதிக அனுமதி வழங்கும் கட்டணங்கள் மற்றும் இமதுவ பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் சேவைகளுக்காக கட்டணம் அறவிடுதல் - 2026

| | | |
|---|---|---|
| உப அட்டவணை I,26 | விதி உருளை (Steam Roller) சேவைக்கட்டணம் - 8 மணித்தியாலங்களுக்கு (சராதியுடன் , எரிபொருள் இன்றி) | ரூ. 18,000.00 |
| | மணித்தியாலங்களுக்கு மேலதிகமாகும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் (மாவட் விலைகளுக்கு ஏற்ப மாறுபடலாம்) | ரூ. 2,000.00 |

| | | |
|---|---|---|
| உப அட்டவணை II,01 | பலநோக்குக் கட்டிடத்தின் மேல்மாடி மண்டபத்தை வாடகைக்கு விடுதல் (ஒரு நாளைக்கு) | ரூ. 15,000.00 |
| | ஒலிபெருக்கி சாதனங்களுக்காக (ஒரு நாளைக்கு) | ரூ. 8,000.00 |
| | குளிரூட்டி வசதிக்காக ( ஒரு நாளைக்கு) | ரூ. 7,000.00 |
| | சொத்துக்கள் அல்லது உபகரணங்களுக்கு சேதம் ஏற்படும் பட்சத்தில், மதிப்பிடப்பட்ட நட்டாடு செலுத்தப்பட வேண்டும் | |

டீ. எஸ். கே. கௌஷல்யா குணசேக்கர,
இமதுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
இமதுவ.

05-33

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2026**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | - | வெள்ளி | 08.05.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 24.04.2025 |
| | | வெள்ளி | 15.05.2026 | - | நண்பகல் 12 | வியாழக் | 30.04.2025 |
| | | வெள்ளி | 22.05.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 08.05.2026 |
| | | வெள்ளி | 29.05.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 15.05.2026 |
| **யூன்** | - | வெள்ளி | 05.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2026 |
| | | வெள்ளி | 12.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2026 |
| | | வெள்ளி | 19.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2026 |
| | | வெள்ளி | 26.06.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2026 |
| **யூலை** | - | வெள்ளி | 03.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2026 |
| | | வெள்ளி | 10.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2026 |
| | | வெள்ளி | 17.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2026 |
| | | வெள்ளி | 24.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2026 |
| | | வெள்ளி | 31.07.2026 | - | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.